# 2.2 எனது வகுப்பறைக்குள் புலம்பெயர்வுக் கதைகள்

**இலக்கு**

*தங்களது நேர்காணல் திட்டத்தின் பகுதியாக மாணவர் தங்கள் வகுப்பறைத் தோழர்களின் குடிபெயர்வுக் கதைகளை ஆய்வு செய்ய முடியும். பொதுத் தன்மைகள் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டே குடிபெயர்வின் தாக்கங்கள் ஒருவரது தன்வரலாற்றில் பிரதிபலிக்கிறது.*

வகுப்புப் 3 - 9 | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நேர்காண் வினாக்களுடன் (வகுப்புடன் ஆக்கப்பட்டவை) பணித்தாள், A3 தாள்

**குறிப்புகள்:**

- ஓரிரு கிழமைகள் முன்னதாக இக்கருத்திட்டம் பற்றி மாணவர்களுக்கு ஆசிரியர் அறிவிப்பார். அதனால் மாணவர் தாமே இதுபற்றி வீட்டில் அறிவித்து வகுப்பறைக்கு ஒரு (நினைவுச் சின்னத்தை) சிறப்பான ஒரு பொருளைக் கொண்டு வரலாம். இந்தத் திட்டம் பெற்றோருடனான நேர்காணலுக்கும் வாழும் மாவட்டத்தில் வசிக்கும் மற்றவர்களது குடிபெயர்வு வரலாற்றை ஆய்வு செய்வதற்கும் நல்ல தொடக்கமாக அமையும். (பார்க்க 2.3, 2.7 அ மற்றும் ஆ கீழே) இது வழக்கமான வகுப்பறைக் கல்வியுடன் இணைந்து செயற்படத் தன்னை வழங்கி நிற்கும்.

**நடைமுறை:**

- அந்தத் திட்டத்தைப் பற்றி மாணவர்க்கு அறிவிப்பார். நேர்காணலில் எவ்வகையான கேள்விகளைக் கேட்கமுடியும் என எடுத்துக்காட்டுக்களுடன் கலந்துரையாடி செய்து காட்டப்படும். உள்ளடங்கும் நேர்காணலுக்கான பொருத்தமான தலைப்புக்களாவன: குடிபெயர்வுக்கான காரணங்களும் திகதியும், பிறந்த நாட்டு தொடர்புகள் குடிபெயர்ந்த நாட்டில் வாழ்க்கை, எதிர்கால நோக்கு (2.7அ இல் பரிந்துரைக்கப்பட்ட கேள்விகள்).

- கேள்விகள் வடிவமைக்கப்பட வேண்டிய முறை கலந்துரையாடப்பட்டு, பயிற்சிசெய்யப்பட வேண்டும். (குறுகிய ஆம் / இல்லை விடைதரக்கூடிய கேள்விகளைத் தவிர்க்கவும்). ஒரு கதை சொல்லுவதற்கு தூண்டக்கூடிய வினாக்களைத் தொடுப்பது வரவேற்கத்தக்கது.

- வயது பொருத்தமான, அல்லது பல்வயதுள்ளோர் 4 பேர் கூடிய குழுக்கள் (முடியுமானால் இணையராக) நேர்காணலுக்காக 4 – 6 கேள்விகள் கொண்ட பட்டியலை ஒழுங்கமைப்பர். இக்கேள்விகளுக்கு முன் நேர்காண்பவரின் வயது, பிறந்த மாகாணம், பிறந்த இடம் என்பவற்றை சுருக்கமாகக் குறித்துக் கொள்ளவேண்டும்.



- இணையராக மாணவர் குடிபெயர்வுத் தலைப்புப் பற்றி மாணவர் ஒருவரோடு ஒருவர் நேர்காணல் செய்வர். ஏற்கனவே வளர்க்கப்பட்ட உரைத் தலைப்புக்களைப் பின்பற்றி நேர்காணல் 5 – 10 மணித்துளிகள் நீடிக்கும். பின்னர் கதாபாத்திரம் மாற்றி அமைக்கப்படும்.

- போதுமான நேரம் கிடைப்பின் நேர்காண்பவர் தனது நேர்காணல் கூட்டாளி பற்றிய ஒரு விளம்பர அட்டையை உருவாக்க முடியும். அதனை அவருக்கு வழங்கலாம். அதனை "இவ்வார இடப்பெயர்வுக் கதை" எனும் தலைப்பில் விரிவாக்கலாம் அல்லது பெற்றோர் நிகழ்வுக்காக காட்சிப்படுத்த முடியும்.

2

- வகுப்பு முழுவதுமாக ஒரு நிறைவுக் கலந்துரையாடலை ஆசிரியர் வழிப்படுத்துவார். அதனில் ஏற்கனவே ஏற்றுக் கொண்டதான கருப்பொருள்களில் (குடிபெயர்வுக்கான காரணங்கள் முதலானவை) ஒப்பீட்டு முறையில் அமையும். தூண்டிகள்: எவ் வகையான பொதுமைகளை வேறுபாடுகளை நீர் தீர்மானிக்க முடியும்? ஏன் மக்கள் குடியகல்கிறார்கள்? குடிபுகுதலுக்கான நிகழ்தகவுக் காரணம் என்ன? உமது பெற்றோர் (பேரன்பேர்த்தியர்) குடிபெயராமலிருந்தால் நீர் இப்போது எங்கு எப்படி இருப்பீர்? என்ன செய்து கொண்டிருப்பீர்? (இத் தலைப்பில் ஓர் கட்டுரை).

# 2.3 எனது புலம்பெயர் வரலாறு எனது தனிப்பட்ட திறமைகள்

**இலக்கு**

*மாணவர் தங்கள் பலத்தை எங்கிருந்து பெறுகிறார்கள், எத்தகைய வளத்தைக் கொண்டுள்ளார்கள். அவர்களது குடிபெயர்வு வரலாறு ஒரு வளமாக என்ன பங்கு கொண்டுள்ளது என ஆராய்வர்.*

வகுப்பு 2 - 9 | 45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஒரு "கதிரவன்" படம்
(எடுத்துக் காட்டு, கீழே பார்க்கவும்)
தாள், நிறங்கள்.

**குறிப்புகள:**

தவறான விளக்கத்தைத் தவிர்ப்பதற்காக, ஆசிரியர் பெற்றோரை முன்னதாகத் தொடர்பு கொள்ள விரும்பலாம். மற்றும் செயற்பாட்டின் இலக்கு பற்றி விளக்கலாம். (வளங்கள் பற்றிய நேர்கணியமான தெளிவு பெற) இந்த செயற்பாடு ஒரு கூட்டுறவுத் திட்டமாக ஒழுங்கான வகுப்பறை போதனைக்கு நன்கு பொருந்துகிறது.

**நடைமுறை:**

- மாணவரில் தாம் கண்டு மெச்சும் குணங்கள் பற்றி அவர்களின் பெற்றோர், சகோதரர், உறவினர் மற்றும் தொடர்புடையோரிடம் நேர்காணல் செய்வது அவர்களது பணியாகும் என ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவிப்பார்.
- வகுப்பு முழுவதும் அல்லது குழுக்களாக மாணவர் இந்த நேர்காணலுக்கான கேள்விகளைத் திரட்டுவர். எடுத்துக்காட்டு: என்னில் பிடித்தது என்ன?, எனது அருமை என்ன?, என்னில் வியக்கும் விடயம் என்ன?, எனது தனித்துவம் என்ன? முதலியன.
- எல்லோருமாகச் சேர்ந்து கேள்விக்கொத்து ஒன்றை வடிவமைப்பர். இரண்டு, மூன்று வடிவமைப்பில் பல்வகைக் கடினத்தன்மை உடையன. ஒவ்வொரு மாணவரும் குறைந்தது மூன்று கணக்கெடுப்புகளை நிரப்பி எடுக்கவேண்டும்.
- மாணவர் இக்கருவிகளை தொடர்புபட்டோருக்கு நிரப்புவதற்காக கொடுப்பர். அல்லது இணைந்து கேள்விக் கொத்துக்களை நிரப்புவர். பிறப்பு நாடுகளிலுள்ள உறவினருடன் தொலைபேசி உரையாடல் (ஸ்கைப்) ஊடாகக் கணக்கெடுப்புகள் நடத்த முடியும்.
- தொடரும் கிழமையில் கணக்கெடுப்புகளின் பகுப்பாய்வு: (மாணவர் தம்முடைய கேள்விக் கொத்துகளை அல்லது தமது வகுப்பறைத் தோழனின் / தோழியின் கேள்விக் கொத்துக்களை மதிப்பீடு செய்வர்) முதலில் "கதிரவன் பட" வடிவில் (கதிரவன் ஆற்றல் வலு என்பவற்றின் குறியீடாக் கீழே படத்தைப் பார்க்கவும்) இந்த நோக்கத்திற்காக தாளில் வலதுபக்க கரையில் கதிரவன் படத்தை வரைந்து, நிறம் தீட்டி, தங்கள் பெயருடன் குறித்துக் கொள்ளவர். பலவித அளவுகளில் அம்புக்குறிகளும் நிறங்களும் சூரியனைச் சுட்டி நிற்கும். கேள்விக் கொத்திலுள்ள கூற்றுக்களை இந்த அம்புக்குறிகள் தாங்கி நிற்கும். (எ.கா. "நான் உனது தாங்கும் வலிமையினை மெச்சுகிறேன்"). இந்த அம்புக்குறிகள் எங்கிருந்து கதிரவன் (அல்லது குறிப்பிட்ட பிள்ளை) தமது வலுவை பெறுகின்றனர் என்பதை முறையே சுட்டி நிற்கும். (அல்லது பேசப்படும் பிள்ளையை) ஒவ்வொரு அம்புக்குறியும் ஒரு வலுவின் ஊற்றையும் அடையாளத்தையும் குறியீடு செய்கின்றது. யாரிடமிருந்து கூற்று வாக்கியம் உருவாகியதோ அவரது பெயரை ஒவ்வொரு அம்புக்குறியும் தாங்கி நிற்கும்.
- குழுக்களில் மாணவர் தங்களது கதிரவன் படத்தினதும் தம்முடைய தனிப்பட்ட திறமைகளையும் அளிக்கை செய்வர். இறுதியாக இந்த வரைபடங்கள் பெற்றோர் சந்திப்பு போன்ற நிகழ்வொன்றில் பின்பு காட்சிப்படுத்த முடியும்.